விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 08 சனிக்கிழமை (23.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 04

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# நோர்வேயும் இணைத்தலைமைகளும் கடும் போக்கை கையாள வேண்டும்!

## கிறிஸ்மஸ் செய்தியூடாக யாழ்.ஆயர் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

நோர்வே மத்தியஸ்தக் குழுவும் இணைத் தலைமை நாடுகளும் போரில் ஈடுபட் டுள்ள இரு தரப்பினரையும் கடினபோக்குடன் கை யாள வேண்டுமென கிறிஸ்மஸ் செய்தி யில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாய கம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த இரண்டு தசாப்தகால யுத்த அனு பவங்களில் தமிழ் மக்கள் என்றுமே அனுப வித்திராத மிக இக்கட்டான கால கட்டத்தில் 2006 ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா அமைவது மிகவும் வேதனைக்குரியது.

ஆண்டவர் யேசுவின் பிறப்பு விழா உலக மக்களுக்கு மீட்பையும் விடுதலையையும் தரும் விழா என்ற வகையில் எந்தத் துன்ப வேளையிலும் காலத்திற்கு ஏற்ற விதமாக அதனை மகிழ்வோடும் நம்பிக்கையோடும் கொண்டாடுவதே பொருத்தமானது.

ஆண்டவர் யேசு அமைதியையும் சமா தானத்தையும் சகோதரத்துவத்தையும் ஏற் படுத்தவே உலகிற்கு வந்தார். வானதூதர்கள் அவரின் வரவின் செய்தியை உன்னதங்க ளிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக. பூவு லகில் நல்மனதோர்க்கு அமைதியுமாகுக என்று வேண்டினார்.

ஆண்டவர் யேசுவின் பிறப்பு இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு அமைதியையும் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் பாதுகாப்பையும் கொண்டுவரும் விழாவாக அமைய முதலில் வாழ்த்துக்களை தெரிவிக் கின்றோம்.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் நடந்த ஜனாதிபதித்தேர்தலும் அதன் பின்னர் இலங் கை அரசியல் களத்தில் ஏற்பட்ட திடீர் மாற் றங்களும் தமிழ் மக்களின் வாழ்வை இன் றைய இந்த இக்கட்டான நிலைக்கு கொண்டு வந்துள்ளது. ஆவணி மாதம் 11 ஆம் திகதி ஏ-9 பாதை மூடப்பட்டமையும் அதனால் வட பகுதி வாழ்மக்கள் (03 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்கும்

## தமிழ்க் கூட்டமைப்பினரிடம் இந்தியப் பிரதமர் உறுதிமொழி

(புதுடில்லி)

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் உறுதியளித்துள்ளார். இந்தியப் பிரதமரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நேற்று புதுடில்லியில் வைத்து சந்தித் தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் அலுவலகத்தில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு இச் சந்திப்பு நடைபெற்றது. இச் சந்திப் பிற்காகச் சென்ற கூட்டமைப்பு எம்.பிக்களை பிரதமர் தனது அலு வலகத்தை விட்டு வெளியே வந்து அழைத் துச் சென்றுள்ளார். எம்.பிக்களும் மரியாதை நிமிர்த்தம் அவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்துள் ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)



## நோர்வேயின் விசேட தூதுவர் பௌயர் அடுத்த வாரம் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

நோர்வேயின் சமாதானத் தூதுவர் ஹான் சன் பௌயர் அடுத்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிய வருகிறது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக் குமிடையே தற்போது ஏற்பட்டுள்ள நெருக் கடி நிலைமைகளுக்கு தீர்வுகாணும் நோக் கிலேயே அவர் கொழும்புக்கு வரவுள்ளார்.

இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற் கொண்டு கொழும்புக்கு வரவுள்ள சமாதா னத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் விடு தலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்திக்க வுள்ளார்.

அத்துடன் கொழும்பில் உள்ள இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளையும் சந் திக்கவுள்ளதாக மேலும் தெரியவருகிறது. (ச-5)

# தமிழர்களுக்கு விரைவில் விடியல் ஏற்படும் தமிழக முதல்வர் கருணாநிதி நம்பிக்கை



(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு விரைவில் விடியல் ஏற்படும் என்று தமிழக முதல்வர் கலைஞர் மு.கரு ணாநிதி நம்பிக்கை தெரிவித்துள்ளார். இலங்கை யில் இருந்து தமிழகத்திற்கு அகதிகளாக வந்துள்ள பாடசாலை மாணவர்கள் தமிழகத்தில் பாடசாலைப் பரீட்சை எழுதுவதற்கு அனுமதி வழங்கிய முதல மைச்சர் கலைஞர் கருணாநிதியை நூற்றிற்கும் மேற்பட்டவர்கள் கடந்த வியாழக்கிழமை மாலை திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைமைய கமான அண்ணா அறிவாலயத்தில் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

அப்போது அவர்கள் மத்தியில் கருணாநிதி பேசி யதாவது; கடந்த பல ஆண்டுகளாக இலங்கையிலே நடைபெறுகின்ற அமைதிக்கு பங்கம் விளைவிக்கின்ற காரியங்கள் எந்த அளவுக்கு தமிழ் நாட்டிலே உள்ள எங்களை எல்லாம் பாதித்திருக்கிறது என்பதை சொல் லத்தேவையில்லை. உலகமே அறிந்த ஒன்று.

10,15 ஆண்டுகாலமாக வந்த உங்களை எல்லாம் வாழவைப்பதற்கு உங்களுடைய கடமைகளை ஆற்று வதற்கு உங்கள் எதிர் காலத்தை செதுக்குவதற்கு நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிதான் நடை பெற் றிருக்கிறதே அல்லாமல் உங்களை மீண்டும் இலங் கைக்கு அனுப்பி நீங்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மனித உரிமைக்குழுவினர் காங்கேசன் துறைக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் துரைராசா சுரேந் திரராஜா மற்றும் சட்ட ஆலோசகர் மு.றெமே டியஸ் ஆகியோர் நேற்று காங்கேசன்துறை பொலிஸ் தலைமையகத்திற்கு விஜயம் மேற் கொண்டனர்.

இதன்போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு தடுத்து வைக்கப் (04 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்க ஊடகவியலாளர்கள் மீது பயங்கரவாத சட்டத்தின் கீழ் விசாரணை

## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

அரசாங்க வார இதழான சண்டே ஒப்சேவரின் இணை ஆசிரியரான லியோனெல் ஜோதசிங்க மற்றும் செய்தி ஆசிரியரான லங்க ஜெயசூர்ய ஆகியோர் மீது புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளமைக்கு சுதந்திர ஊடக இயக்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

பொலிஸ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் நாலாம் மாடியில் அரச ஊடகங்களின் இரு ஊடகவியலாளர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேபோல் 'சிலுமின' ஊடகவியலாளர் பிரசன்ன பொன்சேகாவும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். அரசாங்கத்தின் புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான இத்தகைய ஊடக சுதந்திரத்தை நசுக்கும் நடவடிக்கைகள் அப்பட்டமாகியுள்ளன.

ஆகையால் ஊடக சுதந்திரத்தை நசுக்குகின்ற பிரிவுகள் தொடர்பில் அரசாங்கமானது மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (எ-1)

# தன்னையே ஆயுதமாக்கியவர் தேசத்தின் குரல் பாலசிங்கம்

## கவிஞர் கனிமொழி புகழாரம்

தமிழீழத் தேசத்தின் குரலான அன்ரன் பாலசிங்கம் புதைக்கப்படவில்லை-விதைக்கப்பட்டுள்ளார் என்று தமிழ்நாடு முதல்வர் கருணாநிதியின் மகளும் கவிஞருமான கனிமொழி தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகரும் தமிழீழத் தேசத்தின் குரலுமான அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்குத் தமிழ்நாட்டின் தென்னவன் கலைமன்றம் சார்பில் இரங்கல் கூட்டம் திராவிடர் கழகத் தலைமையகமான பெரியார் திடலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தமிழ்நாடு முதல்வர் கருணாநிதியின் மகளும் கவிஞருமான கனிமொழி கலந்து கொண்டு பேசிய போதே இதனைத் தெரிவித்தார்.

ஈழத் தமிழர்களது சோகங்களின் குரலாக, மொழியாக விளங்கியவர் பாலசிங்கம். தமிழர்களின் பெருமைகளையும் வலிகளையும் துயரங்களையும் உலக மக்களிடையே கொண்டு சென்றவர்.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் நியாயங்களை, தத்துவங்களை உலக நாடுகளிடையே எடுத்துச் சென்ற பெருமை அவருக்கு உண்டு. அவர் போர்க் களத்திற்கு சென்று ஆயுதம் ஏந்திப் போராடவில்லை. ஆனால் அவரே ஒரு ஆயுதமாக விளங்கினார். (ச-5)

# விமான சேவைக்கு ஜனாதிபதியின் பெயர்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சமஸ்கிருத பெயரிலான 'மிகின்' ஏயர் விமான சேவைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இப்புதிய விமான சேவைக்கான தொடக்க முதலீடாக 500 மில்லியனும் ஒட்டுமொத்த முதலீடாக ஆயிரத்து 550 மில்லியனும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றத்தில் ஏற்க னவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்த நிலையிலும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# மருந்துக் கலவையாளர் தற்காலிக நியமனம்

சுகாதாரத் திணைக்களத்தின் பிராந்திய பயிற்சி நிலையத்தில் பயிற்சியை நிறைவு செய்து பரீட்சையில் பங்குபற்றிய மாணவ மருந்துக் கலவையாளர் அனைவருக்கும் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து தற்காலிக நியமனம் வழங்கப்படவுள்ளது.

பயிற்சி பெற்ற சகல மாணவ மருந்துக் கலவையாளர்களையும் எதிர்வரும் 27 ஆம் திகதி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு காலை 11 மணிக்கு சமூகமளிக்குமாறு பிரதி மாகாண சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.(ச)

# சுவிஸ் முகவர் நிலையத்தால் மருந்துப் பொருள்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்களத்து[illegible] அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான சுவிஸ் முகவர் நிறுவனத்தால் 9 லட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இம் மருந்துத் தொகுதி நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் விமானம் மூலம் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டு சுகாதாரத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவை யாழ்.மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. இந்த நெருக்கடியான சூழ்நிலையில் பெறுமதி மிக்க இந்த உதவியை வழங்கிய சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்துக்கு யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்களம் தனது நன்றி அறிதலைத் தெரிவிப்பதா[illegible] திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# விரிவுரையாளர்களுக்கு விண்ணப்பம் கோரல்


(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் 2007 ஆம் ஆண்டு கல்வியாண்டுக்கான பகுதி நேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பம் வியாபாரச் சட்டம், கம்பனிகள் சட்டம், வணிகத் தொடர்பாடல் (ஆங்கிலம்), நிதி முகாமைத்துவம் ஆகிய பாடத் துறைகளுக்குத் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனப் பதிவாளர் ந.உமாகாந் அறிவித்துள்ளார்.(ச)

# பாலாவின் மறைவு ஏற்படுத்தும் கவலைகள் தினமணி நாளிதழின் கட்டுரையில் தெரிவிப்பு



*நேற்றைய தொடர்ச்சி...*

01. தமிழரை தேசிய இனமாக அங்கீகரித்தல்.02.இலங்கையில் தமிழர்களுக்கு தனி நிலப் பகுதியை அங்கீகரித்தல். 03.தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல். 04.மலையகத் தமிழர்கள் உள்ளிட்ட அனைத்துத் தமிழர்களுக்கும் குடியுரிமை, அடிப்படையுரிமைகள் வழங்குதல்.சர்வதேச அரசியல் ஆர்வலர்கள் வரவேற்ற இக் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாததால் பேச்சுவார்த்தை முறிந்தது.

இதன் பிறகு பாலசிங்கம் இந்தியாவிலிருந்து வெளியேறும்படி அரசு உத்தரவிட்டது. அவருடன் தமிழீழ விடுதலை இயக்கத் (ரெலோ) தலைவர் சத்தியேந்திரா, ஈழத் தமிழர் பாதுகாப்புக்கழக அமைப்பாளர் எஸ்.சி. சந்திரஹாசன் ஆகியோரையும் வெளியேற இந்திய அரசு உத்தரவிட்டது.

ஆனால் இதற்கு தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் கடுமையாக ஆட்சேபம் தெரிவித்தன. அப்போது எதிர்க் கட்சித் தலைவராகவிருந்த கருணாநிதி தலைமையில் தமிழீழ ஆதரவாளர் அமைப்பு(டெசோ) நடத்திய போராட்டத்தையடுத்து மத்திய அரசு 3 தலைவர்களுக்கு எதிரான நாடுகடத்தல் உத்தரவை விலக்கிக் கொண்டது.

திம்புப் பேச்சுவார்த்தை தொடங்கி இந்திய -இலங்கை உடன்பாடு இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேச்சுவார்த்தை, நோர்வே முயற்சியில் அமைந்த பேச்சுவார்த்தைகள் அனைத்திலும் பாலசிங்கத்தின் பங்களிப்பு மிகப் பெரியது. இலங்கை ஜனாதிபதியாகவிருந்த பிரேமதாஸாவுடன் புலிகள் 1990இல் நடத்தியப் பேச்சுவார்த்தைக்கும் முக்கிய காரணம் பாலசிங்கம்தான்.

அவருடன் பிரிட்டிஷ் தூதரகத்தில் பணியாற்றியவர்தான் பிரேமதாஸா. தனது பழைய நட்பைப் பேச்சுவார்த்தைக்காகப் பயன்படுத்தினார் பாலசிங்கம்.

1980 ஆம் ஆண்டுகளில் சென்னையில் விடுதலைப்புலிகளின் வயலஸ் சாதனங்களை தமிழகப் பொலிஸார் கைப்பற்றிய போது இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உண்ணாவிரதம் இருந்தார்.

அப்போது குவிந்த அனைத்து மாநிலப் பத்திரிகையாளர்களிடம் பிரபாகரன் பேசியதை மொழிபெயர்த்தவர் பாலசிங்கம்.

அதன் பிறகு 1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை உடன்பாடு ஏற்பட்டவரையில் சென்னை இந்திரா நகரில் செயற்பட்டு வந்த புலிகளின் அலுவலகத்தில் தினந்தோறும் நிருபர்களிடம் பேசிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார் பாலசிங்கம்.

ஒருமுறை பிரான்ஸ் நாட்டுப் பத்திரிகையாளர்களைக் கடல் வழியாகத் தனது இயக்கத்தினர் மூலம் அழைத்துச் சென்று தமிழர் பகுதிகளில் நடைபெறும் தாக்குதல்களை நேரடியாகப் பார்த்து செய்தி சேகரிக்கச் செய்தவர் பாலசிங்கம். *(வளரும்)*

# யாழ்.சாயி நிலையத்தில் நத்தார் விழா

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் நத்தார் விழா பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 5 மணிக்கு நிறைவுபெறும்.

அன்று நத்தார் கீதங்கள், நத்தார்ப் பாப்பா, சிறுவர் நிகழ்ச்சிகள், யேசுபிரானின் போதனைகள் பற்றி சொற்பொழிவு ஆகிய இடம் பெறும். (ச)

# இதழியல் மாணவர்களுக்கு அவசர கலந்துரையாடல்

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய இதழியல் மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அனைத்து ஊடகவியல் மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (ச)

# தே.அ.அட்டை கண்டெடுப்பு

கெருடாவில் தொண்டமானாற்றைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை மாலினி என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ச)

# ஐ.நா.பிரதிநிதி புலிகளுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கைக்கான ஐ.நா.உயர் ஸ்தானிகராலய தலைமை அதிகாரி அமீன் அவாட், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை நேற்றுக் கிளிநொச்சியில் சந்தித்து உரையாடியுள்ளார்.

சந்திப்பின்போது அரசாங்கத்தின் யுத்த முன்னெடுப்புக்கள், தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடை மற்றும் தமிழர் தாயகம் எங்கும் யுத்த சூழலால் எழுந்துள்ள அவல நிலைகுறித்தும் விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப்புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் இளந்திரையன், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் பாவரசன் ஆகியோர் இப் பேச்சுக்களில் பங்கேற்றனர்.

இதேவேளை கிழக்கு மாகாணத்திலிருந்து விடுதலைப்புலிகளை வெளியேற்றும் திட்டத்தில் அரசாங்கம் ஈடுபட்டால் மிக மோசமான அழிவுகளைச் சந்திக்கும், யுத்தத்தை எதிர் நோக்க நேரிடும் என தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார். றொய்ட்டர் செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே இவற்றை அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# நடிகமணி செல்வரத்தினம் ஜேர்மனியில் காலமானார்

(யாழ்ப்பாணம்)

அரியாலையூர் நடிகமணி வி.செல்வரத்தினம் (செல்வம்) நேற்று ஜேர்மனியில் காலமானார்.

இவர் நடிகமணி வி.வைரமுத்துவின் அரிச்சந்திர மயான கண்டத்தில் சந்திரமதியாகப் பெண் வேடமிட்டு அனைவரினதும் பாராட்டையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஸ்ரீவள்ளி, சத்தியவான் சாவித்திரி, ஞானசௌந்தரி ஆகிய நாடகங்களிலும் நடித்துள்ளார். (ச-134)




லயன்ஸ் கழக வலயத் தலைவர் லயன் வி.குமாரின் சேவையைப் பாராட்டி சர்வதேச லயன்ஸ் கழகத்தால் வழங்கப்பட்ட டயமன் விருதை வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் வைத்தியகலாநிதி எம்.தங்கராஜா, சிவகுமாருக்கு அணிவிக்கின்றார். *(படம்:- பரு.நிருபர்)*

> ஞானத்துக்கு அருகதையற்றவர்கள் ஞானிகளைப் போல வேடம் போடுவதனால் பொதுமக்களுக்கு ஞானிகள் மீதே துவேஷம் ஏற்படுகின்றது.
>
> -பிளேட்டோ

வலம்புரி

## நான்கு மாதங்களின் பின்னர் அரசுக்கு ஏற்பட்ட திடீர் ஞானம்

யாழ்.குடாநாட்டு மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் 11 ஆம் திகதி ஏ-9 பாதை மூடப்பட்டதன் பின்னர் நான்கு மாதங்கள் கடந்த நிலையில் யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் அரச உயர் மட்டக் குழு கூடி யாழ்.நிலைமை குறித்து ஆராய்ந்துள்ளது.

நான்கு மாதங்களாக யாழ்ப்பாண மக்கள் பற்றி எதுவும் சிந்திக்காமல் இருந்த அரசு திடீரென உயர் மட்ட மாநாட்டைக் கூட்டியமை பலத்த சந்தேகங்களை எழுப்பியிருந்தாலும் யாழ். குடாநாட்டு மக்களின் அவல நிலைமையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என்பதை நிருபிப்பதாக நேற்று முன்தினம் யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடந்த உயர் மட்ட மாநாட்டை குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

யாழ்.மக்களின் தேவைகளை உடனடியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ள போதிலும் யாழ்.மக்களின் தேவைகள் எவை, அவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது பற்றி தெளிவாகக் கூறப்படவில்லை.

எதுவாயினும் குடாநாட்டு மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமாயின்; அதற்கான முதற்கட்டம் ஏ-9 பாதையைத் திறந்து விடுவதாகும்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதும் குடாநாட்டு மக்களுக்கான உணவுத் தேவை மற்றும் பயண வசதி என்பன உடனடியாகவே கிடைத்துவிடும்.

இதைவிடுத்து ஏ-9 பாதையைத் திறக்காமல் ஆயிரம் கப்பலில் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு வந்தாலும் நானாவிதப் பொருள்களை விநியோகிக்கும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்கு முன்பாக நம்பர்த் துண்டைக் கொண்டு கால் கடுக்கக் காத்திருக்கும் பரிதாபத்தை யாராலும் நிறுத்த முடியாது.

யாழ்.குடாநாட்டு மக்களின் தேவைகள், அவர்களின் பயண வசதிகள் கவனிக்கப்படாமல் எதையுமே செய்து விட முடியாது என்பது யதார்த்தமானது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நிலவும் சிக்கின் குனியாவினால் பாதிக்கப்பட்ட முதியவர்கள் மரணத்தின் விளிம்பில் நின்று உயிருக்காகப் போராடுகின்றனர். பலர் இந்த மண்ணை விட்டே சென்று விட்டார்கள்.

இந்தத் துயரத்தால் திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வந்த இளம் பெண் ஒருவர் கப்பலிலேயே இறந்து போன பரிதாபம் குடாநாட்டு மக்களின் அவல வாழ்வுக்கு ஓர் உதாரணமாகும்.

தமிழினம் என்ற ஒரே காரணத்துக்காக நடக்கும் நிட்டூரம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமாயின்- யாழ்.மக்களின் அவல வாழ்வுக்கு அரசு முடிவு கட்ட வேண்டுமென விசுவாசமாக நினைக்குமாயின், ஏ-9 பாதையைத் திறந்து மக்களின் தேவையை நிறைவு செய்ய வேண்டும். இதுவே காலத்தின் தேவை கருதி எழக் கூடிய ஞானமாகும்.

# 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முன்னிலைப் பெறுபேறுகள் சில

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ஜோன். பொஸ்கோ பாடசாலையின் பெறுபேறுகள் வருமாறு,

என்.கிரிதனன்(144), கி.கிரிப்பிரசாந்(145), பா.ஞானகீதன் (161), ஆ.ஹரிஜெரின் (142), நே.ஹர்ஷன்(134), த.ஜதீஸன் (147), நி.யதுர்ஷன் (143), அ.யூட்கௌதமன்(159), கி.லோகீசன்(164), செ.மரின்சுதர்ஷன் (139), கு.பிரணவன் (153), இ.சங்கீர்த்தனன் (158), செ.சேந்தன் (142), சி.செந்தூரன்(139), சி.சிவசெந்தூரன் (140), க.சுபாங்கன்(150), ந.சுதர்ஷனன் (154), செ.தனுஷன் (137), ப.தினேஷன் (149), க.துலாஞ்சன் (159), இ.துவாரகன்(137), ஞா.விஜித்பாரத் (136), அ.யதுப்பிரியன்(158),

சு.அபிராமி (142), அ.அனோஜா (133), க.ஆர்த்திகா (141), தி.அறிவுச்செல்வி (140), ஸ்ரீ.அருண்ஜா (144), சி.பவானா (170), நெ.பிளஸ்கினி(139), வி.டக்ஷனா (159), ம.ஜோங்காருண்ஜா (144), ம.யூஸ்பூரணி (141), ச.மதனிகா (136), மு.நிஷங்கினி(135), அ.நிக்கரின் (145), ஞா.நிருஜா(134), சி.பிரியந்தினி (164), பெ.ராகவி(167), பு.சுவஸ்திகா (142), கு.துஷ்யந்தி (161), த.சக்தி(134), சு.சுவேதா (135), ம.தனுஷியா(159), த.தேனுகா (135), ஸ்ரீ.உமையாள்(145), க.யாழினி(140),

ம.பாலசதாசிவம் (142), சி.அரவிந்தன்(155), ச.பிருந்தன் (158), யோ.எல்மார்(166), சி.கௌசிகன்(155), தி.கௌசிகன்(144), ந.கடோற்கஜன்(142), அ.லியேஆனல்ட்(153), மூ.மதீஸன்(147), ச.மயூரேசன்(136), பா.பிரசாந்(140), மே.சுபேக்தாஸ்(144), கி.தனுஷன் (144), ம.துளசிதாஸன்(134), வி.விதுஷன் (133),

சி.அரண்ஜா (135), ஜெ.ஆர்த்திகா (142), ஜெ.ஜெவிசா (133), ரா.லக்ஷாயினி (147), இ.மாதங்கி(140), ப.பிறேம்பிரியங்கா(138), வ.பிரியங்கா(149), றே.றிச்சாரியஸ்(162), இ.சாரங்கா(141), இ.சுகிர்தா(138), ம.துஷாரினி (150), வெ.விசித்ரேசன்(150), பா.விதுஷா (148). (ச-133)

# விடைத்தாள் மதிப்பீடு குடாநாட்டில் நடைபெறுமா என்பதில் சந்தேகம்

(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை 2006 விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் யாழ்.மாவட்டத்தில் இந்த முறை நடைபெறுமா? என்பது தொடர்பாக சந்தேகம் நிலவுகின்றது.

க.பொ.த. சாதாரணத் தரப் பரீட்சைகள் தொடர்பான காகிததாதிகள், வினாத்தாள்கள் என்பன விமான மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டு பரீட்சைகள் நடைபெற்றன. விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளன.

விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு இந்த முறை யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் மட்டும் விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணிகள் நடைபெற்றன. இந்த வருடம் பருத்தித்துறையிலும் விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணியை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திற்கு விடைத்தாள் பொதிகளை எடுத்து வருவதில் உள்ள போக்குவரத்துச் சிரமம், விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளை யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்வதற்கு சாதகமாக இல்லை எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியை மேற்கொள்வதற்கு உரிய சகல ஏற்பாடுகளும் உரிய முறையில் நிறைவு செய் யப்பட்டிருப்பதாகவும் விடைத்தாள் பொதிகளை யாழ்.மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வதில் உள்ள சிரமங்கள், விமான மூலம் எடுத்துச் செல்வதில் உள்ள மேலதிக செலவுகள் என்பனவற்றை முன்னிட்டு முரண்பாடான கருத்துக்கள் நிலவுவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# யாழ்.மக்களின் மாதாந்த வாடகையை டயலொக் நிறுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் டயலொக் இணைப்புக்கான மாதாந்த வாடகையை நிறுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

குடாநாட்டில் கையடக்கத் தொலைபேசிகளுக்கான இணைப்புக்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதிக்குப் பின்னர் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் டயலொக் இணைப்புக்களை வைத்திருப்போர்களிடமிருந்து டயலொக் நிறுவனம் தொடர்ந்தும் மாதாந்த வாடகைப் பணத்தை அறவிட்டு வருவதாக பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி நிறுவனத்தின் உரிய அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டதையடுத்து இதன்பிறகு இவ்வாறான சுமைகள் மக்கள் மீது சுமத்தப்பட மாட்டாது என டயலொக் நிறுவனத்தின் சார்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ)

# நோர்வேயும் இணைத்தலைமைகளும்...

பட்டினிச்சாவை எதிர்நோக்கும் அளவிற்கு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டு பெற்றவேதனை மிக்க அனுபவங்களும் சொல்லுந்தரமன்று. கடந்த கால இரண்டு தசாப்த யுத்த அனுபவத்தில் பல கொடூரத் துன்பங்களை தமிழ் மக்கள் அனுபவித்திருந்தபோதும் இந்தத் தடவை ஏ-9 பாதை மூடப்பட்டமையால் அவர்கள் பெற்ற பன்முக வடிவத் தாக்கங்களின் அனுபவம் கடந்த கால அனுபவங்களை விட பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளது என்ற வகையில் மிகவும் கொடூரமானது என்றே கூறவேண்டும்.

இந்த நிலைபற்றி நோர்வே மத்தியஸ்தக் குழுவினருக்கும் இணைத் தலைமை நாடுகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் உள்நாட்டில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் ஊடகங்களுக்கும் தெரிவித்தும் எந்தப் பயனும் ஏற்படவில்லை என்பது வருத்தத்துக்குரியதாகும்.

இலங்கையின் இரு பெரும்பான்மைக் கட்சிகளின் இணைவின் வழி அரசு தமிழ் மக்களுக்கு எந்தவிதமான தீர்வைத் தரப் போகின்றது என்பது இன்னும் ஐயத்துக்கு இடமாகவேயுள்ளது. போரையும் அதன் வழியிலான தீர்வையும் அரசு முன்னெடுக்க விளைகின்ற வேளை மாவீரர் தின நிகழ்வுரையில் விடுதலைப்புலிகளின் தலைவர் தெரிவித்திருக்கும் கருத்துக்களும் போரையே நாடுவதாக அமைகின்றது.

தமிழ் மக்கள் போரை ஒருபோதும் விரும்பவில்லை. போர் அனுபவங்களால் உடல், உள ரீதியாகத் தாக்கப்பட்டு யுத்தமற்ற பூமியில் அமைதியாக வாழ விரும்புகின்றார்கள். நோர்வே மத்தியஸ்தக் குழுவும் இணைத் தலைமை நாடுகள் மென்மையான போக்கைக் கடைப்பிடித்து எதையுமே இதுவரை சாதிக்கவில்லை.

இனி வரும் காலத்தில் என்றாலும் இவர்கள் அரசை பேசியவற்றை நடைமுறைப்படுத்தும்படி கட்டாயமாக நிர்ப்பந்திக்கும் வேளை விடுதலைப்புலிகளை எப்படியாவது பேச்சின் வழி நீதியான ஒரு தீர்வை முன்வைத்து போரை முடிவுக்குக் கொண்டு வருமாறு கட்டாயப்படுத்தவும் வேண்டும் என இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவர் பெயராலும் இலங்கையின் சுபீட்சமான எதிர்காலத்தை மனதில் கொண்டு அவ் வேண்டுகோளை இந்த வேளையில் திரும்பவும் மீள வலியுறுத்த விரும்புகின்றோம்.

சம்பந்தப்பட்டவர்கள் எமது வேண்டுகோளை ஏற்று ஆக்கபூர்வ நடவடிக்கையில் உடன் இறங்க வேண்டுமென அழைப்பு விடுக்கின்றோம். இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு இந்தியாவிற்கும் ஒரு பெரும் பொறுப்பும் கடமையும் இருக்கின்றது. இந்தியா எமது அண்டை நாடு . பிரதேசத்தாலும் கலாசாரத்தாலும் தமிழ் மொழியாலும் இணைத்துக் கொண்ட நாடு.

கடந்த கால கசப்பான அனுபவங்ளையும் தோல்வியான முடிபுகளையும் மனதில் கொள்ளாது உடனடியாக இலங்கை இனப்பிரச்சினையில் முழுமையாக இறங்கி நீதியோடு கூடிய ஓர் நிரந்த தீர்வுக்காக கடுமையாக உழைக்க உடன் முன்வரவேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம்.

இலங்கையில் நிலைமை மோசமடைவதற்கு முன்னர் இந்தியா இந்த சமாதான முயற்சிகளுக்கான தனது செயற்பாடுகளை ஆரம்பிப்பதே இன்றைய காலத்தில் அவசர தேவையாகும். இலங்கைப் பிரச்சினையில் இந்தியா மேலும் காலம் தாழ்த்தாது உடன் இறங்கி செயற்பட வேண்டும் என்ற இந்த வேண்டுகோளைத் தமிழ்நாடு கத்தோலிக்க ஆயர் பேரவைக்கும் அனுப்பி அழுத்தம் கொடுக்குமாறும் வேண்டியுள்ளோம்.

இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை தமது அழுத்தத்தினால் இவ்வேண்டுகோளை நடைமுறைப்படுத்த வேண்டும். இக்கட்டான இக் கால கட்டத்தில் பல்வேறுபட்ட துன்ப அனுபவங்களிலும் சுனாமியால் நமது மண்ணில் இறந்து போனவர்களை நினைத்து அவர்களுக்காகவும் வேண்டுகின்றோம்.

பல்வேறு துன்ப துயர அனுபவ மத்தியில் மனச் சோர்வும் விரக்தியும் அடைந்து நிற்கும் தமிழ் மக்கள் அனைவருக்கும் பாலக யேசுவின் பிறப்பு புது நம்பிக்கையும் சமாதானத்தையும் கொண்டு வரவேண்டி நிற்கின்றோம். மலர இருக்கும் 2007-வது புத்தாண்டு சமாதானம், அமைதி, பாதுகாப்பு என்பவற்றோடு தமிழ் மக்கள் அனைவருக்கும் பிறக்க வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் வேண்டிநிற்கின்றோம். (ச)

# 18 ஆயிரத்து 30 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு

நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் இவ்வருடத்தில் 18 ஆயிரத்து 30 புது மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

புதிய மாணவர்கள் அனுமதி தொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று முன்தினம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவ் வருடம் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக 17 ஆயிரத்து 630 மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு ஆணைக்குழு ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

களனிப் பல்கலைக்கழகம் தனது சமூகவியல் துறைக்கு மேலதிகமாக 400 மாணவர்களை உள்வாங்கத் தீர்மானித்ததனால் இத்தொகை அதிகரிக்கப்பட்டது.

கடந்த க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களிடமிருந்து பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இதற்காக இம் முறை 38 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

அடுத்த வருடத்தில் 20 தொடக்கம் 25 ஆயிரம் வரையிலான மாணவர்களை புதிதாகச் சேர்த்துக்கொள்ள உத்தேசித்துள்ளோம் எனவும் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (ச-5)

# தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணக் கோரி சென்னையில் மனிதச்சங்கிலிப் போராட்டம்

## ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு



(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தி நேற்று தமிழகத்தில் மனித சங்கிலிப் போராட்டம் நடைபெற்றது.

இலங்கை இராணுவத்திற்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக்கூடாது என்று வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் திராவிடக் கழகத்தலைவர் வீரமணி தலைமையில் நடைபெற்றது.

மனித நேயத்தின் அடிப்படையிலும் தமிழர்கள் என்ற எண்ணத்திலும் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்குத்தீர்வுகாண இந்தியா தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டுமென இந்த போராட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்திற்கு இந்தியா பயிற்சி அளிக்கக் கூடாது எனவும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ச-9)

# இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் நேரடித் தலையீடு இல்லை

## இந்திய வெளியுறவுச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பிரச்சினையில் இந்தியா நேரடியாக தலையிடாது. இது தான் இந்தியாவின் நிலைப்பாடு. அதே நேரத்தில் அங்கு அமைதி நிலவ வேண்டும். தமிழர்கள் நிம்மதியுடன் வாழ தீர்வுகாணப்படவேண்டும் என்று இந்தியா விரும்புகிறது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி திட்டவட்டமாக அறிவித்தார்.

இலங்கை இராணுவ வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதற்கு அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். ஆனால் அவர்களுக்கு புனேயில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது ஒன்றும் புதிதல்ல.

வழக்கமாக அளிக்கப்படும் பயிற்சி தான் இராணுவ வீரர்களுக்கு சிறப்பானமுறையில் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களும் நம் நாட்டில் உள்ளன. அதனால் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் நம் நாட்டு இராணுவ பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுகிறார்கள். இதன்மூலம் இந்திய இராணுவத்தின் பொருளாதாரம் மேம்படுகிறது.

சுரங்கங்களில் பயன்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக வெடிபொருட்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டு வந்தன. ஆனால் அங்கு சூழ்நிலை சரியில்லாததனால் தற்போது வெடி பொருட்கள் அனுப்பப்படுவது முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினை குறித்து தமிழக முதல்வர் கடிதத்திற்கு பதில் கடிதம் அனுப்பினோம். இலங்கைப் பிரச்சினையை பொறுத்தவரை இந்தியா நேரடியாகத் தலையிடாது. அதே நேரத்தில் இலங்கை இறையாண்மைக்கு தகுந்தபடியும் அங்குள்ள சட்டதிட்டங்களுக்கு தகுந்தபடியும் சரியான தீர்வுகாண வேண்டுமென்று இந்தியா விரும்புகிறது.

அங்கு அமைதி நிலவவேண்டும். தமிழர்கள் அமைதியான முறையில் வாழ வேண்டுமென்று விரும்புகின்றோம்.

அங்கு அமைதி யை ஏற்படுத்தும் முயற்சியில் ஏற்கனவே நோர்வே நாட்டுத் தூதுவர்கள் ஈடுபட்டுள்ளனர். அந்தப் பேச்சு வார்த்தையில் தீர்வு ஏற்படவேண்டுமென்று வாழ்த்துகிறோம் என்றார். (ச-5-133)

# யாழிற்கான தபால் பொதிகளை விரைந்து அனுப்ப நடவடிக்கை

## தபால் மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பண்டிகை காலத்தை முன்னிட்டு வட பகுதிக்கு அனுப்பப்படவுள்ள தபால் பொதிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை விரைவாக கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த தபால் மா அதிபர் சேவின் சேனாதிர இது தொடர்பாக தாம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் கலந்துரையாடியதாக தெரிவித்தார்.

திருகோணமலைக்கு லொறி மூலம் அனுப்பப்படும் பொதிகள் மற்றும் பண்டங்கள் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படும். சில பொதிகள் 10 கிலோ முதல் 15 கிலோ வரை நிறையுடன் இருப்பதால் பல சிக்கல்கள் எழுந்துள்ளதாகவும் இவ்வாறாக 4 ஆயிரத்துக்கும் அதிகமான பொதிகள் திருகோணமலையில் தேங்கிக்கிடக்கின்றன.

எனவே 5 கிலோ அளவிலான பொதிகளே அனுப்புமாறு தபால் மா அதிபர் பொது மக்களைக் கேட்டுள்ளார். (ச-133)

# யாழ்.மனித...

பட்டுள்ள பண்டத்தரிப்பு சில்லாலையைச் சேர்ந்த மனோகரசீலன் தேவசீலன் (வயது 21) என்ற இளைஞனை பார்வையிட்டனர்.

குறித்த இளைஞன் கைதுசெய்யப்பட்ட பின் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் பலவற்றை தமக்குக் காண்பித்ததாக கூறிய பொலிஸார் இவரை அவசரகால சட்டத்திற்கு அமைய கொழும்புக்கு அனுப்பப் படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (ச-5)

# தமிழர்களுக்கு...

இங்கே வந்து என்னைப் பார்ப்பதைப்போல நான் அங்கே வந்து உங்களை பார்க்கின்ற ஒரு காலம் வரவேண்டு மென்ற கவலை எனக்கு மிகவும் உண்டு.

அது என்னவோ இலங்கைக்கு வர நான் பல முறை முயன்றும் கூட நடைபெறவில்லை. இயலாமல் போய்விட்டது. ஏன் இயலவில்லை என்றால் இலங்கையிலே இருந்த-இருக்கிற அரசு எனக்கு அனுமதி தரவில்லை. சில நேரங்களில் அங்கே ஏற்பட்ட குழப்பங்களின் காரணமாக நான் வருவது நல்லதல்ல என்று அங்கிருந்த அரசும் எனக்கு செய்தி அனுப்பியது.

இங்குள்ள அரசும் என்னைத் தடுத்து நிறுத்தியது. நான் ஒருமுறை இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி யிடம் இதனைச் சொன்ன போது நான் ஏற்பாடு செய்யட்டுமா நீ போய் வருகிறாயா என்றுகூடக் கேட்டார்கள்.

அப்போது இலங்கையிலே இதை விட அதிகமா கக் கொந்தளிப்பான சூழ்நிலை. எனவே அந்தப் பயணமும் தடைப்பட்டது. இலங்கையில் பல பெரிய வர்கள் இலங்கையை அமைதி சூழ் நாடாக ஆக்க வேண்டுமென்று பாடுபட்டிருக்கிறார்கள்.

தந்தை செல்வா, ஜீ.ஜீ.பொன்னம்பலம், அமிர் தலிங்கம் போன்வர்களும் எத்தகைய முயற்சிகளிலே ஈடுபட்டார்கள் என்பதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும்.

இலங்கையிலேயே ஒரு சமஷ்டி அரசு அமைய வேண்டும் என்பதற்காக முதல் குரல் கொடுத்தவர் சந்திரகாசன் தந்தை செல்வாதான் என்பதையும் அவர் சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்த நிகழ்ச்சியையும் எண்ணிப்பார்க்கிறேன்.

இலங்கையையே மையமாக வைத்து புதையல் , பாயும்புலி பண்டாரவன்னியன் போன்ற கதைக ளைக்கூட எழுதியிருக்கின்றேன். உங்களில் ஒரு சிலர் படித்திருக்கக் கூடும். இப்படி இலங்கையோடு இலக் கிய ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் எனக்குள்ள தொடர்பு என்றென்றும் பட்டுப்போகாத ஒன்று; பசுமை யான ஒன்று.

இயல்பாகவே எங்களுடைய இரத்த ஓட்டத்திலே உள்ள உணர்வுதான் வெளிப்பட்டிருக்கிறது என்பதை மாத்திரம் எடுத்துச்சொல்லி என்றென்றும் உங்களுக் காக நான் என்னுடைய கடமையை தொடர்ந்து செய்து கொண்டே இருப்பேன் என்பதனையும் தெரிவித்து விரைவில் விடியல் ஏற்படும் என்ற நம்பிக்கையோடு இங்கு தமிழகத்திற்கு வந்திருந்து படித்து ஓரளவு பயிற்சியும் பெற்றிருக்கின்ற உங்களை வழி அனுப்பி வைக்கிறேன் என அவர் தெரிவித்தார். (ச-5)

# தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க...

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதுடில்லியில் சந்தித்துப் பேசினர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா ,செல்வம் அடைக்கலநாதன் ,சுரேஸ் பிரேமச்சந்திரன் , கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த திராவிட இயக்க தமிழர் பேரவையின் அமைப்பாளர் பேராசிரியர் சு.ப.வீரபாண்டியன் ஆகியோர் சந்திப்பில் பங்கேற்றனர்.

சென்னையில் தமிழ் நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதியை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் கடந்த புதன்கிழமை சந்தித்துப்பேசினர். அதனைத் தொடர்ந்து இச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

நேற்றைய சந்திப்புத் தொடர்பாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்ததாவது;

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் ஈழத்தமிழர்களின் துயரங்களை விளக்கினோம். இச் சந்திப்பு 45 நிமிடநேரம் நடைபெற்றது. நாங்கள் முன்வைத்த வேண்டுகோள்கள் அனைத்தும் நியாயமானவை தான் என்று இந்தியப் பிரதமர் எம்மிடம் தெரிவித்தார்.

மேலும் வடக்கு கிழக்கு பிரிக்கப்படக் கூடாது என்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது என்றும் மன்மோகன் சிங் தெரிவித்தார். இலங்கையில் வாழும் தமிழர்கள் கௌரவத்தோடும் கண்ணியத்தோடும் பாதுகாப்பாகவும் வாழவேண்டும் என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடு.

அண்மையில் இந்தியா வந்திருந்த ஜனாதிபதி ராஜபக்ஷவிடமும் இதனை வலியுறுத்தியிருக்கிறோம் என்றும் இந்தியப் பிரதமர் எம்மிடம் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமருடனான எமது சந்திப்பானது ஒரு திருப்புமுனையாகும். இந்தச் சந்திப்பின்போது இந்தியப்பிரதமரின் முதன்மை ஆலோசகர் என்.கே.நாராயணன், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவசங்கர் மேனன் ஆகியோர் உடன் இருந்தனர். இன்றைய கூட்டம் நடைபெறுவதற்கு முக்கியமான காரணகர்த்தா தமிழ் நாட்டு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி. அதற்கு நாங்கள் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

15 வருடங்களுக்கு பின் இந்தியப்பிரதமரைச் சந்தித்துள்ளோம். மிகவும் அன்பாகவும் பண்பாகவும் எம்முடன் நடந்துகொண்டார்.' இக் கூட்டத்தின்போது இலங்கையின் விசேடமாக வட-கிழக்கில் நிலவுகின்ற நிலைமைகள் சம்பந்தமாக மிகவும் கடுமையானதோர் இராணுவப்போக்கின் காரணமாக இடம் பெறுகின்ற கொலைகள், மக்கள் காயப்படுதல், மக்களுடைய சொத்துக்கள் நிலங்கள் வீடுகள் கால்நடைகள் தோட்டங்கள் அழிக்கப்படுவது, மக்களுடைய தொழிலை மக்கள் இழந்து பரிதவிப்பது இது சம்பந்தமான விடயங்களை தெளிவாக எடுத்துக் கூறினோம்.

இலங்கை தமிழ் மக்கள் உணவு ,மருந்து மற்றும் எரிபொருள் அற்ற நிலையில் இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அதே வேளை இந்தப்பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இலங்கை தமிழர்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையிலும் தமிழர்களுக்கான அரசியல் வெற்றிடம் தோற்றப்பட்ட இந்த தருணத்தில் இலங்கையின் ஒருமைப்பாடு மற்றும் இறைமை குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமான செயல்கள் குறித்தும் இந்தியப்பிரதமரும் இந்தியாவும் கவலைகொண்டுள்ளதாக இந்தியப் பிரதமர் தெரிவித்ததாக கூறிய அவர், இந்த விடயம் குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்கனவே இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளதாக தெரிவித்தார்.வட -கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்படுவதானது தமிழ்ச் சமூகத்தைப் பெரிதும் பாதிக்கும் எனவும் அந்த ஊடக வியலாளர் மாநாட்டில் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.